வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 3865 /ஆ4/ 2023, நாள்.09.05.2024

பொருள் : தேர்வுகள் –மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டமை மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுள் 10.05.2024 அன்று வெளியிடப்படவுள்ளது– பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு 100 சதவிகிதம் தேர்ச்சி கொடுத்த ஆசிரியர்களின் விவரங்கள் கோருதல் –சார்பு

==========

வேலூர் மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டதை தொடர்ந்து , வருகின்ற 10.05.2024 அன்று பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்படவுள்ளது.

எனவே அனைத்து வகை அரசு/நிதியுதவி /ஆதிதிராவிட நல /நகரவை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள் தங்கள் பள்ளியில் 100 சதவிகிதகம் தேர்ச்சி கொடுத்த முதுகலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களின் விவரங்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Forms –ல் 14.05.2024 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் பதிவுகள் மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பள்ளித் அரசு/நிதியுதவி /ஆதிதிராவிட நல /நகரவை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கையொப்பமிட்ட பிரதி ஒன்றினை வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை) அலுவலகத்திலும் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள் கையொப்பமிட்ட பிரதி ஒன்றினை வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள்) அலுவலகத்திலும் ஒப்படைக்க தெரிவிக்கப்படுகிறது. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள்) அவர்கள் பெறப்பட்ட படிவத்தினை தொகுத்து முதன்மைக்கல்வி அலுவலகத்தில் 15.05.2024 முற்பகல் 11.00 மணிக்குள் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :

1. படிவம்
2. Google Forms –Link

//ஒம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,

- அனைத்து வகை மேல்நிலை பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் வேலூர் மாவட்டம் .

நகல்

1. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் பள்ளிகள் ) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.